## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 தைத் திங்கள் 21–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.373/2022 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 02/2025**

**LIC Housing Finance Ltd. Rep. By its**
**Senior Branch Manager** **...மனுதாரர்/02–ஆம் பிரதிவாதி.**

**–எதிர்–**

**தீபன்** **...எதிர்மனுதாரர்/வாதி.**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு R.கோபி** அவர்கள் தோன்றினார். எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு S.செந்தூர் ஈஸ்வரன்** அவர்கள் தோன்றினார். இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

**முகவுரை**

முதலேற்பு வழக்கில் மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியை 01.08.2022 ஆம் தேதியன்று தோன்றாத் தரப்பினராக்கி இந் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்யக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 09-ஆம் வகுமுறையின் 07-ஆம் விதியின்கீழ் மனுதாரர்/02 ஆம் பிரதிவாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

III rd ADJ Court, Salem

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் 02-ஆம் பிரதிவாதி ஆவார். மனுதாரர் ஓர் நிதி நிறுவனம் ஆகும். மனுதாரர் நிறுவனம் சார்பாக 2022 ஆம் ஆண்டு ஜூலைமாதம் அப்போதைய சார்பாற்றுனர் (முதுநிலை கிளை மேலாளர்) இந்த வழக்கிற்கான அழைப்பாணையை பெற்றார். மனுதாரரின் தற்போதைய சார்பாற்றுனர் இணையவழி நீதிமன்ற சேவை மூலம் 15.04.2025-ஆம் தேதியன்று இந்த நடவடிக்கை குறித்து பார்த்தபோது 01.08.2022-ஆம் தேதியன்றே மனுதாரர் நிதி நிறுவனம் தோன்றாத் தரப்பின ராக ஆக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவந்தது. மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியின் தவறுகை வேண்டுமென்றோ அலட்சியத்தாலோ ஏற்பட்ட தல்ல. மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி இந்த மனுவுடன் எதிர்வழக்குரையும் தாக்கல்செய்துள்ளார். இந்த வழக்குமீதான அழைப்பாணை சார்வுசெய்வதில் குறைபாடு உள்ளது. ஆகையால், இந்த மனுவை அனுமதித்து 01.08.2022 ஆம் தேதியன்று மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியை தோன்றாத் தரப்பின ராக்கி இந் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

02. முதலேற்பு வழக்குமீதான அழைப்பாணையை மனுதாரர்/02 ஆம் பிரதிவாதியின் அப்போதைய கிளை மேலாளர் பெற்றுக்கொண்டிருக் -கிறார். அழைப்பாணையை பெற்றுக்கொண்ட மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியின் சார்பாக யாரும் தோன்றாததால்தான் மனுதாரர்/02-ஆம்

பிரதிவாதியை தோன்றாத் தரப்பினராக்கி இந் நீதிமன்றம் ஆணையிட் டிருக்கிறது.

**03.** 01.08.2022-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையை இரத்துச் செய்யக்கோரி 22.06.2023-ஆம் தேதியன்று மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி இதுபோன்றதொரு விண்ணப்பத்தை தாக்கல்செய்தார். அந்த விண்ணப்பம் 09.10.2023-ஆம் தேதியன்று குறைபாடுகளுக்காக திருப்பப்-பட்டது. அதன்பிறகு அந்த மனுவை மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி மீண்டும் தாக்கல்செய்யவில்லை. எதிரவரில்லா நிலையில் சாட்சியம் பதிவுசெய்யப் பட்டு தீர்ப்புக்காக இருந்த நிலையில் மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி இந்த மனுவை எவ்வித காரணமும் இல்லாமல் வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளார்.

**04.** அழைப்பாணை சார்வுசெய்வதில் எவ்வித குறைபாடும் இல்லை. ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

05. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

**06.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. இந்த மனுவிற்கான ஆணையுறுதி ஓர் ஆணையுறுதிப் பத்திரம் எத்தகைய சங்கதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 19-ஆம் வகுமுறையில் வகுத்துரைக்கப்பட்டதோ அதற்கு முற்றிலும் முரணாக முன்தீர்ப்புகள் குறிப்பிடப்படும் விவாதங்கள் நிறம்பவும் உள்ளது.

III rd ADJ Court, Salem

**07.** முதலேற்பு வழக்குமீதான அழைப்பாணை மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியின் அப்போதைய சார்பாற்றுனர்களால் 07.07.2022-ஆம் தேதி யன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு பெறப்பட்டிருக்கிறது. அவ்வாறு இருக்க அழைப்பாணை சார்வுசெய்வதில் முறைகேடும் குறைபாடும் உள்ளதாக மனுவில் பொய்யான சங்கதிகள் குறிப்பிட்டு அது சம்மந்தமான நீதிமன்ற முன்தீர்ப்புகளை மனுதாரர் குறிப்பிட்டிருப்பது கண்டிக்கத்தக்கது.

**08.** 22.06.2023-ஆம் தேதியன்று மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியால் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 09-ஆம் வகுமுறையின் 07-ஆம் விதியின்கீழான விண்ணப்பம் ஒன்று தாக்கல்செய்யப்பட்டிருக்-கிறது. அந்த விண்ணப்பம் குறைபாடுகளுடன் இருந்ததால் அதை திருத்த திருப்பப்பட்டிருக்கிறது. அந்த விண்ணப்பம் மீண்டும் 09.10.2023-ஆம் தேதியன்றுக்குமுன் நீதிமன்ற அலுவலகத்தில் முன்னிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சொன்ன குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாததால் மீண்டும் அந்த விண்ணப்பம் 03.11.2023-ஆம் தேதியன்று திருப்பப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன விவரங்கள் முதலேற்பு வழக்குமீதான நீதிமன்ற குறிப்பிலிருந்து தெரியவருகிறது. அதன் பிறகு அந்த மனுவை மீண்டும் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக பின்னிட்டு இந்த மனு தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது.

**09.** மேலே சொல்லப்பட்டுள்ளது ஒரு புறம் இருக்க இந்த வழக்கின் தன்மை, சூழ்நிலை ஆகியவற்றை கவனத்தில் வைத்து வழக்குகள் அனைத்தும் தகுதிப்பாட்டின்பேரில் முடிவுசெய்யப்பட வேண்டும் என்ற

நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்புநெறிகளை கவனத்தில் வைத்து செலவுத் - தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதித்து இந்த மனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

10. இறுதியாக, மனுதாரர்/02-ஆம் பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதிக்கு 19.02.2026-ஆம் தேதியன்றுக்குள் 10,000/-**(பத்தாயிரம் மட்டும்)** உரூபாயை செலவுத்தொகையாக கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை-யுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரிதிங்கள் 04–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V

Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.02.04 18:07:57 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

III rd ADJ Court, Salem

**இணைப்பு:–** இல்லை